දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax ) 0112692913

විද්‍යුත් තැපෑල ) postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
E-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
Website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதாரம் அமைச்சு
Ministryof Health

මගේ අංකය )
எனது இல )
My No. ) CF/EXU/03/2021

ඔබේ අංකය )
உமது இல )
Your No. )

දිනය ) 2021/10/...12
திகதி )
Date )


**பொது சுற்றுநிருப கடித இலக்கம் :** 02-94/2021

மாகாண சுகாதார செயலாளர்கள்
பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கை தேசிய வைத்தியசாலை
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
மத்திய அமைச்சின் கீழ் உள்ள அனைத்து வைத்தியசாலைகளின் பணிப்பாளர்களும்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
உரிய நிறுவனத் தலைவர்களுக்கும்

**சுகாதாரம் அமைச்சில் (MT - 06) சம்பள அளவுத்திட்டத்தில் துணை மருத்துவ சேவையில் வகுப்பு II 'அ' பிரிவு / தரம் II இல் பூச்சியியல் உதவி உத்தியோகத்தர்களின் பொருட்டான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2021**

துணை மருத்துவ சேவையில் வகுப்பு II 'அ' பிரிவு / தரம் II ஐ சேர்ந்த பூச்சியியல் உதவி உத்தியோகத்தர்கள் வகுப்பு II 'அ' பிரிவு / தரம் II இற்கு பதவியுயர்த்தப்பட்டு 03 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் சித்தியடைய வேண்டிய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் நடாத்தப்படும் என்பது இத்தாள் அறியத்தரப்படுகின்றது. (விடயப்பரப்புடன் தொடர்புடைய வினாத்தாள் ஆங்கில மொழியில் மாத்திரம் வழங்கப்படும்) பரீட்சை நடைபெறும் திகதி, இடம் மற்றும் நேரம் என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படும்.

**02 தகைமைகள்**

துணை மருத்துவ சேவையில் வகுப்பு II 'அ' பிரிவு / தரம் II ஐ சேர்ந்த பூச்சியியல் உதவி உத்தியோகத்தர்கள் வகுப்பு II 'அ' பிரிவு / தரம் II இற்கு பதவியுயர்த்தப்பட்டு இதுவரை இப் பரீட்சைக்குத் தோற்றாத உத்தியோகத்தர்கள் மாத்திரம் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

**கவனிக்கவும் : 2021/11/12 ஆம் திகதியன்று தரம் II இற்கு நியமிக்கப்பட்டு / உள்வாங்கப்பட்டு உரிய நியமனக் கடிதம் கிடைக்கப் பெற்றுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களை மாத்திரம் அனுப்பி வைக்கவும்.**

**03 விண்ணப்பங்கள்**

இச் சுற்று நிருபத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தங்களினுடைய திணைக்களத் தலைவரின் ஊடாக பணிப்பாளர் (பரீட்சைகள்), சுகாதார அமைச்சு, "சுவசிரிபாய", இலக்கம் - 385, வணக்கத்திற்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 என்னும் முகவரிக்கு 2021/11/12ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் சரியானவை என திணைக்கள தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு இருக்க வேண்டும். தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முகவரியிடப்பட்ட ரூபா. 45 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறைகள் 03


385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10. 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10.
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10, Sri Lanka.

இனையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ,அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத்திகத்திக்கு பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.

***விண்ணப்பமானது A4 தாளின் இருபக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்படவேண்டும். முதலாவது பக்கத்தில் 01 - 04 வரையான விபரங்களும், இரண்டாவது பக்கத்தில் 05 - 09 வரையான விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.***

## 04 பரீட்சைக் கட்டணம்

4.1 முதன் முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூபா.25 வீதம் இரத்துச் செய்யப்படாத முத்திரையினை ஒட்டி அதன் மீது தமது கையொப்பத்தினை இட்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

4.2 எக் காரணத்தினைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது வேறு பரீட்சைகளின் பொருட்டு மாற்றப்படுதலோ, அல்லது மீளப் பெறுதலோ மேற்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது.

## 05 பரீட்சைக்கு அனுமதிக்கப்படல்

5.1 ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். அப் பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை குழுவின் தலைவரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லையாயின் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

5.2 பரீட்சையின் பொருட்டு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் பொருட்டு பரீட்சைக் குழுவின் தலைவருக்கு தங்களினது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை கொண்டு வருதல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை
(ஆ) திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை
(இ) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்
(ஈ) செல்லுபடியான கடவுச் சீட்டு

## 06 பரீட்சை திட்டம்

இப் பரீட்சை திணைக்களப் பரீட்சை, வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை எனும் இரண்டு பிரிவுகளைக் கொண்டது. திணைக்களப் பரீட்சை எழுத்து, பிரயோகம், வாய்மொழி எனும் மூன்று பிரிவுகளை கொண்டதுடன் ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. சித்தியடைவதன் பொருட்டு ஒவ்வொரு பிரிவிற்கு ஆகக் குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை தாபனவிதிக்கோவையும், அலுவலக ஒழுங்குவிதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்கள் எனும் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவின் பொருட்டும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. சித்தியடைவதன்பொருட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

ஒரே அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையினை பூரணப்படுத்திக்கொள்ள முடியும்.

**முதன்முறையாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் அனைத்துப் பிரிவுகளிற்கும் விண்ணப்பிக்கவேண்டும்.**

07 பரீட்சை பாடத்திட்டம்

7.1 **விடயப்பரப்புடன் தொடர்புடையது (எழுத்து) நேரம் 03 மணித்தியாலங்கள்.**

இந்த வினாத்தாள் கட்டுரை வடிவிலான வினாக்கள் 08 ஐ கொண்டுள்ளது. அதில் ஏதாவது 05 வினாக்களுக்கு விடையளிக்குக.

**பாடத்திட்டம்**

01. வானிலைக்கும், நோய்க்காவிகளின் பழக்கத்திற்குமிடையே உள்ள பரஸ்பர தொடர்பிற்கான அடிப்படைக் காரணி.
02. அனைத்து நோய்க்காவிகளினதும் வாழ்க்கை விருத்தி தொடர்பான விதிகள், வகைப்படுத்தல், ஆய்வு நடவடிக்கைக்காக திரவியங்களை சேகரித்தல்.
03. கூண்டுப்புழுக்களின் செயற்கையான வளர்ந்த குவியல்கள்.
04. பரிசோதனை தொடர்பாக சேகரித்தல் மற்றும் நடாத்துதல்.
05. கல்விப் பிரதேசம் மற்றும் ஆய்வுப் நடவடிக்கைகளுக்கு உரிய வரைபு மற்றும் குறிப்புக்களை தயாரித்தல் மற்றம் தகவல்களை அறிக்கையிடுதல் மற்றும் ஆய்வு.
06. வகைப்படுத்தல், விசேட அடையாளம் காணுதல் மற்றும் அதிகமான ஆய்வுகள்.
07. விசேடமாக உரிய நடத்தை ரீதியான இலட்சினைகளின் ஆராய்ச்சி , அமைப்பு விஞ்ஞானம் மற்றும் ,காவி நிலை.
08. பரிசீலனை களம் அவற்றிற்குரிய வரைபுகளும்
09. கேரியர் கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாட்டு விதி ஆய்வு
10. சுகாதாரக் கல்வி மற்றும் தொடர்பாடல்
11. சுற்றாடல் சுகாதாரம் மற்றும் சட்ட நடவடிக்கைகள்.

7.1.2 **விடயப்பரப்புடன் தொடர்பான பிரயோக பரீட்சை**

விடயப் பரப்பிற்கு ஏற்புடையதான இயலுமைகள், செயற்பாடுகள் மற்றும் ஏற்புடைய பிரயோகப் பரீட்சை ஆகும். எழுத்து மூல வினாத்தாளுக்குரிய விடயப் பரப்பிற்கு உரிய பாடத்திட்டம் இதற்கும் பொருந்தும். நேரம் - 15 நிமிடம்.

7.1.3 **விடயப்பரப்புடன் தொடர்பான வாய்மொழிப் பரீட்சை**

விடயம் தொடர்பான எழுத்து மூல வினாப்பத்திரத்திற்கு உரியதும் சேவைபுரியும் போது எழும் சிக்கல்கள் தொடர்பான வாய்மொழிப் பரீட்சையாகும். நேரம் 15 நிமிடங்கள்.

7.2 **வினைத்திறமை காண் தடைப் பரீட்சை**

7.2.1. **தாபன விதக்கோவையும் அலுவலக ஒழுங்கு விதிகளும் வினாத்தாள்.**

இந்த வினாத்தாளுக்கு 02 மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டுரை வடிவிலான 07 வினாக்களைக் கொண்டுள்ளது. அதில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| அத்தியாயம் | XV | கல்வி , பயிற்சி அல்லது கடமை நிமித்தம் வெளி நாட்டிற்குச் செல்லுதல் |
| அத்தியாயம் | XVI | விடுமுறைப் பயணம் (Holyday Travel ) |
| அத்தியாயம் | XXIII | விசேட வகையான நோய்கள் காரணமாக அல்லல்படும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான விசேட சலுகைகள் மற்றும் நிபந்தனைகள். |
| அத்தியாயம் | XXIV | சம்பளக் கடன் / முற்பணங்கள் |
| அத்தியாயம் | XXV | தொழிற்சங்க உறுப்பினர்களுக்கான சலுகைகள் |
| அத்தியாயம் | XXVII | தொடர்பாடல் முறைகள் |
| அத்தியாயம் | XXVIII | நிர்வாக நடைமுறைகள் |
| அத்தியாயம் | XXX | அரசாங்க ஊழியர்கள் மீதான அரசாங்கத்தின் உரிமைகள் |
| அத்தியாயம் | XXXIII | சட்ட ஆலோசனைகளும், சட்ட நடவடிக்கைகளும் |
| அத்தியாயம் | XLVII | பொது நடத்தையும், ஒழுக்கமும் |
| அத்தியாயம் | XLVIII | ஒழுக்காற்று நடைமுறை |

உத்தியோகத்தர்களின் செயலாற்றுகை மற்றும் தரங்கணிப்பு தொடர்பான அரச பொதுநிர்வாக சுற்றுநிருபங்களும் அடக்கப்படும்.

**7.2.2 நிதிப் பிரமாணங்கள் வினாப்பத்திரம**

இந்த வினாத்தாளுக்கு 02 மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டுரை வடிவிலான 07 வினாக்களைக் கொண்டுள்ளது. அதில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

| | |
|---|---|
| அத்தியாயம் VI - | பொது நிதியினைப் பராமரித்தல் / பாதுகாத்தல் (Custody) முதலியன, காசு கட்டு நிதி மற்றும் வங்கிக்கணக்குகள் / பொதுநிதியின் பிணை / முறி, பகுப்பாய்வுச் சபை (Board of Survey) வங்கிப்பற்று, வங்கிக் கணக்குகள் (நிதிப்பிரமாணங்கள் 315 - 396) |
| அத்தியாயம் XIII - | விநியோக வேலைகள், மற்றும் சேவைகள்:- வழங்கல்கள் / பொருட் கொள்வனவு முறைகள் களஞ்சியப் பொருட்களைச் சரிபார்த்தல் களஞ்சியப்படுத்தும் முறை, ஒப்பந்தங்கள், பொருட்கொள்வனவு நடைமுறைகளில் இருந்து விலகுதல் (நிதிப்பிரமாணங்கள் 708 - 775) |

**08 பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்.**

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவிசெய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09 தயவு செய்து இச்சுற்று நிருபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை உங்களது பிரிவில் / விஷேட இயக்கத்தில் / நிறுவனத்தில் கடமையாற்றும் பொருத்தமான சகல உத்தியோகத்தர்களுக்கும் அறியத் தரவும். இந்த விபரங்களை www.health.gov.lk என்னும் இணையத் தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**Web Path: -** www.health.gov.lk → Staff Access → Admin → Circulars

**கவனிக்கவும் :- சிங்களம், தமிழ், ஆங்கில மொழியிலான சுற்றுநிருபங்களுக்கிடையே ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமாயின் சிங்கள மொழியிலான சுற்றுநிருபமே வலுவுடையதாகும்.**

சாமிக எச் கமகே
பிரதிப் பணிப்பாளர் நாயகம் ( நிர்வாகம் ) II
செயலாளருக்காக,
சுகாதார அமைச்சு

Chamika H. Gamage
Deputy Director General (Administration) II
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.



385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10. 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10.
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10, Sri Lanka.

**EXU**

அலுவலக உபயோகத்தின் பொருட்டு

மாதிரி விண்ணப்பப் படிவம்

**சுகாதார அமைச்சில் (MT - 06) சம்பள அளவுத்திட்டத்தில் துணை மருத்துவ சேவையில் வகுப்பு II 'அ' பிரிவு / தரம் II இல் பூச்சியியல் உத்தியோகத்தர்களின் பொருட்டான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை - 2021**

01. (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில் எழுதவும்)

.......................................................................................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (ஆங்கில கப்பிட்டல் எழுத்தில்)

(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) .......................................................

.......................................................................................................

(iv) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில்)

(ஆ) (i) வகுப்பு II "அ" / தரம் II ற்கு பதவியுயர்த்தப்பட்ட திகதியும், கடித இலக்கமும் : ...............

.......................................................................................................

(ii) தற்போது பெறும் வருடாந்த சம்பளம் : .......................................................

(iii) தேசிய அடையாள அட்டை இல :

(iv) கையடக்கத் தொலைபேசி இலக்கம் :

(v) மின்னஞ்சல் முகவரி: .......................................................

02. தாங்கள் இம்முறை தோற்றுவதன் பொருட்டு எதிர்பார்த்துள்ள விடயத்தின் எதிரேயுள்ள கூண்டினுள் (√ ) அடையாளத்தினை இடுக. தோற்ற வில்லையாயின் (X) அடையாளமிடுக.

நிதிப்பிரமாணம் வினாப்பத்திரம் ☐ விடயம் தொடர்பான வினாத்தாள் ☐

அலுவலக நிர்வாகமும், தாபன விதிக்கோவையும் வினாப்பத்திரம் ☐ விடயம் தொடர்பான பிரயோகப் பரீட்சை ☐

விடயம் தொடர்பான வாய்மொழிப் பரீட்சை ☐

03. (அ) தற்போது சேவைபுரியும் நிலையம் (தமிழில்) .......................................................

(ஆங்கிலத்தில்) .......................................................

(ஆ) அதற்குரிய மாவட்டம் .......................................................

(இ) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது மத்திய அரசினால் ☐ மாகாண சபையினால் ☐

(ஈ) மாகாண சபையாயின் உரிய மாகாணம் .......................................................

(உ) பரீட்சை அனுமதி அட்டையினை அனுப்புவதன் பொருட்டு பிழையின்றி தெளிவாக தங்களுடைய முகவரி எழுதப்பட்ட 9" X 4" அளவுடைய, ரூபா 45.00 பெறுமதியுடைய முத்திரையொட்டப்பட்ட கடித உறைகள் மூன்று விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா? ...............................

(ஊ) (i) தபால் முகவரி (தமிழில்) .......................................................

.......................................................................................................

(ii) தபால் முகவரி (ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில்) ...............................

04. பரீட்சைக்குத் தோற்றும் மொழி ( சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) .......................................................

05. (அ) இதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு தோற்றியுள்ளீர்களா? ..............................................................

(ஆ) அவ்வாறு தோற்றியிருந்தால் இம்முறை முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா? ..............................................................

| முத்திரைக்கூண்டு |
|---|

06. **விண்ணப்பதாரியின் சான்றிதழ்**

(அ) எனது அறிவிற்கும், விசுவாசத்தின் அடிப்படையிலும் இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவைகளெனவும், இப் பரீட்சைக்கு நான் தோற்றுவது முதன்முறையானபடியால் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை எனவும் / முதன் முறை அல்லாதபடியால் ரூபா ........................ பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்தில் என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் மதிப்பு நீக்கம் செய்வதற்கு முன்பு வலுவிலுள்ள பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

(ஆ) சுகாதாரத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு உடந்தையாக நடப்பேன் எனவும், இப்பரீட்சை தொடர்பாக நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எதுவிதத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுவேன் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி .................................. ..................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

07. **தனிநபர் கோவையினை கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றிதழ்**

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி .................................. ..................................................

பெயரும் கையொப்பமும், திகதியும்

08. **நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திருமதி/செல்வி* ......................................................... என்பவர்................. உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் பணிபுரிகின்றார் என்றும் அவ் உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறையாக உள்ளதால் / முதன் முறையாக இல்லாத* படியால் ரூபா ................ பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும் / முத்திரைகள் ஒட்ட அவசியமில்லை* எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும் , எனது முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி .................................. ..................................................

நிறுவனத் தலைவரின் கையொப்பம்

09. **பன்முகப்படுத்தப்பட்ட /விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர் / திருமதி / செல்வி .................................................... என்பவர் தரம் II / வகுப்பு II "அ" இனைச் சேர்ந்த பூச்சியியல் உத்தியோகத்தராக எனது பிரிவில் / இயக்கத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரருக்கு தகுதி உள்ளதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ..................................

..................................................

பன்முகப்படுத்தப்பட்ட பகுதி /

விசேட பிரிவு தலைவரின் கையொப்பம்

இறப்பர் முத்திரை இடப்படவேண்டும

* தேவையற்றவற்றினைக் கீறிவிடவும்.